மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் பொய்கைகரைப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவரின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை: திருமதி.V.லெட்சுமி

ந.க.எண். 01/2023–24

நாள்: 17.02.2024

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு – மதுரை கிழக்கு வட்டம் – மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் – பொய்கைகரைப்பட்டி ஊராட்சி – பொய்கைகரைப்பட்டி கிராமம் – சர்வே எண்கள் 33/11C1, 16B, 18B, 54/1, 3A, 3B, 3C, 3D, 4A, 4B, 4C, 5, 6, 7, 8A, 8B, 8C, 9 மற்றும் 10-ல் 5 ஏக்கர் 15½ செண்ட் (20750.0 ச.மீ) பரப்பளவு கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது – மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. மனுதாரர் திரு.S.ரெங்கசுவாமி பவர் ஏஜெண்ட் மனு நாள்: 12.02.2024.
2. அரசாணை (நிலை) எண்.255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை நாள்: 18.08.1997.
3. அரசாணை எண்.02, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.3(நிபமா)த்துறை நாள்: 04.01.2021.
4. அரசாணை எண்.(2டி), எண்.271 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.3(நிபமா)த்துறை நாள்: 15.11.2021.,
5. அரசாணை (நிலை) எண்.78 மற்றும் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017.
6. அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி(1) துறை நாள்: 04.02.2019.
7. அரசாணை (நிலை) எண்:181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020.
8. அரசாணை (நிலை) எண்:26 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை (SGS-3) நாள்: 18.02.2015.
9. மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் ந.க.எண். 7436/2023/SWP/4PBY256G/2023/TCP நாள்: 01.09.2023.
10. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019–பிஏ2 நாள்: 05.02.2020.

11. மனுதாரர் திரு.S.ரெங்கசுவாமி அவர்களிடமிருந்து உள்ளாட்சி அமைப்பிற்கு தானமாக பெறப்பட்ட அசல் பத்திரம் எண். 2040/2023 நாள்: 03.08.2023 மற்றும் TANGEDCO-க்கு தானமாக பெறப்பட்ட அசல் பத்திரம் எண்.2042/2023 நாள்: 03.08.2023.

12. மனுதாரர் திரு.S.ரெங்கசுவாமி அவர்கள் வளர்ச்சி கட்டணம் மற்றும் லேண்ட் கன்வெர்சன் சார்ஜ் செலுத்தியதற்கான வங்கி வரைவோலை மற்றும் ரசீது.

உத்தரவு:

மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் — திட்டமில்லா பகுதி, மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குள்பட்ட பொய்கைகரைப்பட்டி ஊராட்சி, பொய்கைகரைப்பட்டி கிராமம், சர்வே எண்கள் 33/11C1, 16B, 18B, 54/1, 3A, 3B, 3C, 3D, 4A, 4B, 4C, 5, 6, 7, 8A, 8B, 8C, 9 மற்றும் 10-ல் 5 ஏக்கர் 15½ செண்ட் (20750.0 ச.மீ) பரப்பளவு நிலத்தை பார்வை—4ல் காணும் அரசாணையின்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ம.உ.தி.கு. எண்.64/2023 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும், திட்ட அனுமதியும் பெறப்பட்டுள்ள மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு பார்வைகளில் காணும் கடிதங்கள் மற்றும் அரசாணைகள் மற்றும் உத்தரவுகள் அடிப்படையில் கீழ்காணும் நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை—9, 10 மற்றும் 11-ன்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகளுக்கான தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கீடு பரப்பு 95.28 ச.மீ. மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கு 100.38 ச.மீ. தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்டது. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகளுக்கான திறந்தவெளி பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட பரப்பு (OSR) 1615.25 ச.மீ. உள்ளாட்சிக்கு தானமாக பத்திரம் எண்.2040/2023 நாள்: 03.08.2023 அன்று கொடுக்கப்பட்டது.

பொய்கைகரைப்பட்டி ஊராட்சிக்கு வளர்ச்சி கட்டணம் இந்தியன் வங்கி கே.கே.நகர் கிளை வரைவோலை எண்.429325 நாள்: 17.02.2024 மூலம் ரூ.1,08,000/- மற்றும் லேண்ட் கன்வெர்சன் சார்ஜ் ரூ.72,870/- இந்தியன் வங்கி கே.கே.நகர் கிளை வரைவோலை எண்.429324 நாள்: 17.02.2024 மூலம் ஆக மொத்தம் ரூ.1,80,870/- செலுத்தியுள்ளார்.

நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019-ல் மனைப் பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்கும் பொருந்தும். எனவே பொருத்தமான அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

a. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ./ம.உ.தி.கு. எண்.64/2023 என எண்ணிடப்பட்டுள்ள வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப் பிரிவுக்குள் அமையும் தெருக்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்— 2019 விதி 47(11)ன்படி மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி, வடிகால் வசதி OHT மற்றும் மின்சார தெருவிளக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தால் (TANGEDCO) மதிப்பீடு செய்யும் தொகையை மனுதாரரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

b. மனுதாரர் பார்வை—11ன்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் உள்ளாட்சி மற்றும் (TANGEDCO)விற்கு தான ஆவணம் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளதை மனைப்பிரிவு வரைபடம் மற்றும் தானப்பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பி வருவாய்த்துறை ஆவணங்களில் நிலஅளவை செய்து உள்ளாட்சி மற்றும் TANGEDCO பெயரில் உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்து கொடுக்க வேண்டும்.

2. மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலையின் அமைப்புகள், அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல், மனையை உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணம் முன்னிட்டும் மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

4. நகர் ஊரமைப்புத்துறை கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறையோ ஊராட்சி ஒன்றியமோ, ஊராட்சியோ பொருத்தமான அமைப்பு அல்ல.

5. சாலையில் இருபுறங்களிலும் 10அடி தூரத்திற்கு ஒன்றாக நிழல் தரும் மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

6. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு மட்டுமே பொருந்தும் மனையில் அமையும் கட்டிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படக் கூடாது.

7. மனைப்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின் கம்பிப் பாதை இருந்தால் மனுதாரரே தனது செலவில் சாலையின் ஓரமாக மாற்றி அமைக்க வேண்டும்.

8. உள்ளாட்சி அமைப்புக்கு 100.38 ச.மீ. மற்றும் பூங்காவிற்காக 1615.25 ச.மீ. தானமாக பதிவு செய்து கொடுக்கப்பட்ட இடத்தில் மனுதாரரே தனது செலவில் சுற்றி முள்வேலி அமைத்து உள்ளாட்சி அமைப்புக்கு ஒதுக்கப்பட்ட இடம் என தகவல் பலகை அமைக்க வேண்டும்.

9. மனைப்பிரிவின் ஊடே நீர்ப்பாசன வாய்க்கால் இருந்தால் எந்தவிதமான ஆக்கிரமிப்போ மனையில் கட்டப்பட உள்ள வீடுகளின் கழிவுநீரோ விடக்கூடாது.

10. இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலையின் இறுதி வால்பகுதியை (Road Tail End) எக்காரணம் கொண்டும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அடைப்பு / தடுப்பு ஏற்படுத்தக்கூடாது.

11. மேற்காணும் விதிமுறைகள் ஏதும் மீறப்பட்டிருந்தால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி பொய்கைகரைப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் / செயல் அலுவலர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

அங்கீகரிக்கப்படும் மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

பொய்கைகரைப்பட்டி கிராமம், சர்வே எண்கள். 33/11C1, 16B, 18B, 54/1, 3A, 3B, 3C, 3D, 4A, 4B, 4C, 5, 6, 7, 8A, 8B, 8C, 9 மற்றும் 10-ல் 5 ஏக்கர் 15½ செண்ட் (20750.0 ச.மீ.) பரப்பளவு.			
1.	உத்தேச மனைப்பிரிவின் மொத்த பரப்பு	:	20750.00 ச.மீ.
2.	உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடுக்குகளின் பரப்பளவு	:	5105.70 ச.மீ.
3.	உள்ளாட்சி அமைப்புக்கான ஒதுக்கீடு	:	100.38 ச.மீ.

4.	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கான ஒதுக்கீடு	:	95.28 ச.மீ.
5.	பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட பரப்பு	:	1615.25 ச.மீ.
6.	மொத்த மனைகளின் எண்ணிக்கை (1 முதல் 108)	:	108 மனைகள்
a.	சாதாரண மனைகள் (1–45, 54–69, 83, 84, 93–108)	:	79 மனைகள்
b.	(EWS) குறைந்த வருவாய் பிரிவினருக்கான மனைகள் (46–53, 70–82, 85–92)	:	29 மனைகள்

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மதுரை மாவட்ட நகர் ஊரமைப்பு, மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பொய்கைகரைப்பட்டி ஊராட்சி, பொய்கைகரைப்பட்டி கிராமம் சர்வே எண். 33/11C1, 16B, 18B, 54/1, 3A, 3B, 3C, 3D, 4A, 4B, 4C, 5, 6, 7, 8A, 8B, 8C, 9 மற்றும் 10-ல் 5 ஏக்கர் 15½ சென்ட் (20750.0 ச.மீ.) பரப்பளவு கொண்ட (1 முதல் 108) எண்ணிக்கையிலான மனைகள் கொண்ட திட்ட அனுமதி வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

17/2/24

தலைவர்/ செயல் அலுவலர்
பொய்கைகரைப்பட்டி ஊராட்சி
மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம்

இணைப்பு :

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்–1

பெறுநர்

திரு.S.ரெங்கசுவாமி,
எண்.3, 1வது குறுக்குத் தெரு,
டாக்டர்.எஸ்.வி.கே.எஸ்.தங்கராஜ் சாலை,
கே.கே.நகர்,
மதுரை–625020.

நகல் :

1. உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்,
மதுரை உள்ளூர் திட்ட குழுமம்,
மதுரை.

2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
மதுரை.

3. சார்பதிவாளர் – பதிவுத்துறை,
காதக்கிணறு அலுவலகம்,
மதுரை.

4. TANGEDCO மதுரை.

5. TNRERA, சென்னை.